**செ. கு. எண்**:385 **நாள்**:29.10.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 29.10.2012

27.10.2012 அன்று தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்திலிருந்து எ.வேடபட்டி சென்று கொண்டிருந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து குரளயம்பட்டி கிராம பேருந்து நிறுத்தம் அருகே வந்த போது, அந்தப் பேருந்தின் ஓட்டுநர் திரு. வெ.முருகன் அடையாளம் தெரியாத நபர்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மனவேதனையும் அடைந்ததோடு அவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் ஏற்கெனவே தெரிவித்திருந்தேன்.

சமூக விரோதிகளால் தாக்கப்பட்டு பணியிலிருக்கும் போது உயிரிழந்த பேருந்து ஓட்டுநர் திரு. முருகன் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:-**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**